## <u>பயிற்சிகள்.</u>

வணக்கம் மாணவர்களே,

பாடப் புத்தகத்தில் பக்கம் **141** இல் காணப்படும் வலிமிகா இடங்களை அறிதல். அதோடு, பக்கம் **141** இல் காணப்படும் இடுபணி **1,** குறைநீக்கல் பயிற்சியையும் செய்தல். உங்கள் விடைகளைத் தொலைவரியில் அனுப்பவும். இத்தலைப்பையொட்டி கலந்துரையாட கூகுள் கூடலில் (Google Meet) ஞாயிறு இரவு **7** மணியளவில் சந்திப்போம். அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

நன்றி, மாணவர்களே.

## பாடம் 4 இலக்கணம்

### வலிமிகா இடங்கள் அறிக.

**இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வலிமிகாது.**

எ.கா: விறகு + கட்டினாள் = விறகு கட்டினாள்
கனி + தின்றான் = கனி தின்றான்
மாலை + சூடினாள் = மாலை சூடினாள்
இலை + பறித்தாள் = இலை பறித்தாள்

(குறிப்பு: இத்தொடர் அமைப்புகளில் இரண்டாம் வேற்றுமை உருபான 'ஐ' மறைந்துள்ளதால் இவை இரண்டாம் வேற்றுமைத்தொகையாகும்.)

### இடுபணி 1

**பின்வரும் தொடர்களை இரண்டாம் வேற்றுமைத்தொகையாக மாற்றுக.**

1. கோட்டையைக் கட்டினான்
2. ஊரைச் சுற்றினார்
3. தலையைத் தட்டினாள்
4. புளியைக் கரைத்தாள்
5. துணியைத் துவைத்தார்
6. கதையைக் கேட்டாள்

### இடுபணி 2

**கீழ்க்காணும் இரண்டாம் வேற்றுமைத்தொகைச் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைத்திடுக.**

மரம் வெட்டு | வீடு கட்டு | துணி கட்டு | குழல் ஊது

### வளப்படுத்துதல்

**இரண்டாம் வேற்றுமைத்தொகையை அடிப்படையாகக் கொண்டு 10 சொற்களை உருவாக்குக.**

### குறைநீக்கல்

**கீழ்க்காணும் சொற்கள் ஒவ்வொன்றனையும் அவற்றின் இணையுடன் சரியாக இணைத்திடுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | பால் | துறந்தான் | 4 | கல் | நிறுத்தினான் |
| 2 | பொன் | கொடுத்தாள் | 5 | வாசி | உடைத்தான் |
| 3 | இல்லறம் | உருக்கினான் | 6 | வாயு | உயர்த்தினான் |

5.5.9 இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.